RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2224s2017

OPEN ACCESS

# விழியன் கதைகள் ஏற்படுத்தும் வாழ்வியல் மாற்றங்கள்

சா. பவித்ரா [அ, *], நா. குமாரி [அ,]

[அ] தமிழ்த்துறை, அக்சிலியம் கல்லூரி (தன்னாட்சி), காந்தி நகர், வேலூர்-632006, தமிழ்நாடு, இந்தியா.

# Lifestyle Changes caused by Vizhiyan Stories

S. Pavitra [a, *], N. Kumari [a]

[a] Department of Tamil, Auxilium College, Gandhi nagar, Vellore-632006, Tamil Nadu, India

* Corresponding Author: arninpavi@gmail.com

Received: 25-06-2022
Revised: 26-09-2022
Accepted: 07-10-2022
Published: 05-11-2022

**ABSTRACT**

Children's literature is a recognized genre of world literature. This category includes a wide variety of works, including lullabies, myths, fairy tales, stories written exclusively for children, folk songs, and materials primarily sent orally with other data. Millions of years have passed since man appeared in the world. But the language appeared only a few thousand years ago. If you look closely at the history of world literature, there have been great thinkers in Asia and Europe. Their ways and ways of living with the language that guides them are intermingled. Valluvar, who has written about life skills and pathinenkilkanakku sprinkled with advice based on life is proof of the changes in life. The name 'Writer Vizhiyan' is a magical term that sounds in Tamil children's literature. He continues to write stories for children. The article takes a closer look at how children continued reading of stories contributes to the lifestyle changes that occur in their teens and how their self-confidence becomes special through story reading and leads to social progress.

**Keywords:** Vizhiyan Stories, Lifestyle, Literature, Valluvar

## முன்னுரை

சிறார் இலக்கியம் என்பது உலக இலக்கியத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வகை. தாலாட்டுகள், கட்டுக்கதைகள், விசித்திரக் கதைகள், குழந்தைகளுக்காகவே பிரத்யோகமாக எழுதப்பட்ட கதைகள், நாட்டுப்புற பாடல்கள் மற்றும் பிற தரவுகள் கொண்டு முதன்மையாக வாய்வழியாக அனுப்பப்பட்ட பொருட்கள் உட்பட பலவிதமான படைப்புகளை இந்த வகை உள்ளடக்கியது. உலகில் மனிதன் தோன்றி லட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் மொழி தோன்றியது சில ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தான். உலக இலக்கிய வரலாற்றை உற்று நோக்கும்போது ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் சிறந்த சிந்தனையாளர்கள் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களின் வழிகளிலும் வழிநடத்தும் மொழியுடன் வாழும் முறைகள் இரண்டற கலக்கப்பட்டு விட்டன. வாழ்வியல் சார்ந்து எழுதிய வள்ளுவரும் அறிவுரைகள் அள்ளித் தெளிக்கும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் வாழ்வியல் மாற்றத்திற்கு சான்றாக நிற்கின்றன. அந்தவகையில் விழியன் தன் படைப்புகள் வழி சிறார்களின் வாழ்வியல் மாற்றத்துக்கு எந்த அளவுக்கு வித்திட்டுள்ளார் என்பதை பார்ப்போம்.

## அளப்பரிய உந்து சக்தி உருவாக்கம்

சிறுவயதில் கதைகள் வாசிப்பது அளப்பரிய உந்து சக்தியை உருவாக்குகிறது என்று பல சான்றோர்கள் மொழிந்துள்ளார்கள்.

'குழந்தைகளையும் திண்பண்டத்தையும் பிரித்துவிடலாம்.

குழந்தைகளையும் விளையாட்டையும் பிரித்துவிடலாம்'

ஆனால் குழந்தைகளையும் கதைகளையும் பிரிக்கவே முடியாது என்கிறார் சிறார் எழுத்தாளர் (Pathy, 2005).

'கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் கூட பிள்ளைகளுக்கு கதை சொல்லும் வழக்கம் இருந்து வந்தது. தொலைக்காட்சியின் வருகைக்குப் பின் அந்த வழக்கம் மெல்ல மெல்ல தேய்ந்து மறைந்து விட்டது. இதனால், பிள்ளைகள் மட்டுமல்ல, பெற்றவர்களும் இழந்தது அதிகம். ஆனால், அந்த இழப்பின் அருமையை உணராமல் தான் நம்மில் பலரும் இருக்கிறோம். வாழ்க்கை, நெருக்கடிகள் அதிகம் உள்ளதாகவும் நின்று பேசவும் அமர்ந்து யோசிக்கவும் அவகாசம் இல்லாததாகவும் கடந்த 20 ஆண்டுகளில் மாறி, அவசரகதியில் வேகமெடுத்து இருக்கிறது. அதன் காரணமாக பல நுட்பமான விஷயங்களை தவற விடுகிறோம். அந்த நுட்பமான விஷயங்கள் பொருளியல் ரீதியாக நேரடியான பலனை தராத வகையாக இருக்கலாம். ஆனால், அவை தான் வாழ்க்கையை அர்த்தமாக்குபவை. கதை கேட்பதும், கதை சொல்வதும், கதையை வாசிப்பதும் அப்படியான அர்த்தமுள்ள செயல்கள். அவற்றை மீட்டு எடுப்பது மிகவும் அவசியமான ஒன்று என்று எழுத்தாளரும் பத்திரிகையாளரும் திரைப்பட வசனகர்த்தாவுமான பாஸ்கர் சக்தி கூறுகிறார் (Hindu, 2022).

## நன்மை தீமையை பகுத்தாயும் திறன் மேலோங்கல்

காலம் அதிவிரைவாக உருமாற்றம் பெற்று கொண்டிருக்கிறது. மனித மனம் என்றும் புதுமையில் நாட்டம் காணும் இயல்புடையது. அதிலும் சிறார்கள் புதுமையின் கவர்ச்சியில் சுண்டி இழுக்கப்படுப்பவர்கள். பள்ளி வாழ்க்கையில் புதுப்புது நட்புகள் அன்றாடம் ஏற்படும். நன்மை, தீமை இரண்டும் கலந்த வெளி உலகம் அது. உடன் சேரும் நன்மையும் தீமையும் வாழ்வியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். அதனால் நமக்கான நன்மை எது தீமை எது என்று பகுத்து கூடிய திறமையை சிறுவர்கள் இளம் பருவத்திலேயே கைக்கொள்ள வேண்டியது அவசியம்.

புகைப்பழக்கம், போதைப்பொருட்கள் எடுத்துக்கொள்வது, திரைப்பட மோகம், பாலுறவு பழக்கம், பொய் பேசுதல், ஆடம்பர செலவுக்காக வீட்டில் திருடுதல், குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பது போன்ற தீய ஒழுக்கங்கள் பதின்பருவத்தில் பற்றி விட்டால் அதிலிருந்து மீள்வது கடினம். ஒட்டு மொத்த வாழ்க்கையே அழிந்துவிடும் அபாயம் உள்ளது. இதனாலேயே பள்ளிகளில் நன்னெறி கதைகள் சொல்லித் தர வேண்டும் எனும் கூற்று சமீபகாலங்களில் பலமாக கேட்கிறது.

வாழ்வில் நிகழும் நிகழ்வு எல்லாமே ஏதோ ஒன்றை நமக்குச் சொல்லித் தருகின்றது என்று புரிதலில் வாழ்க்கையை அணுகுபவர்கள் ஒவ்வொரு பிரச்சனையிலும் ஒவ்வொரு படிப்பினையை பெற்றுக் கொண்டு அதை மிகச் சரியாக சந்திக்கும் விதத்தில் தன்னை பலப்படுத்திக் கொள்கிறார்கள். எனவே புரிந்து கொள்ளும், அறிந்து கொள்ளும், தெரிந்துகொள்ளும் விதத்திலேயே வாழ்க்கை தீர்மானிக்கப்படுகிறது. இப்படியாக சிறார்கள் புரிந்துகொள்ளும், அறிந்துகொள்ளும், தெரிந்துகொள்ளும் களங்களாக கதைகள் அமைகின்றது. கதைகள் மூலமாக நன்னெறி கூற்றுகள் சிறார் மனதில் ஆழமாக உள்ளிறங்குவதால் அது அவர்களின் வாழ்வியல் மாற்றத்திற்கு வித்திடும் போக்கு காணப்படுகிறது.

'அனிதாவின் கூட்டாஞ்சோறு' எனும் கதையில் அனிதா தான் முக்கிய கதாபாத்திரம். நீட் தேர்வில் பாதிக்கப்பட்டு மருத்துவ கனவை இழந்த அனிதா எனும் மாணவியின் நினைவாய் இக்கதைக்கு அதன் பிரதிபலிப்பாகவே அனிதாவின் பெயர் எடுத்தாளப்பட்டுள்ளது. இந்தக் கதையின் இறுதியில் அனிதா என்னும் கதாபாத்திரம் நெஞ்சுரம் கொண்ட பெண்ணாகவும் "ஆமா ரஹீம், நான் டாக்டராக போறேன்" என்று இறுதி வாக்கியம் முடிக்கும் போதும் தன் உறுதியை முன்னிறுத்துகிறார் (Hindu, 2022).

## மேம்பட்ட வாழ்வு நிலை

விழியன் கதைகளில் பிரதிபலிக்கும் நேர்மறை எண்ணங்கள் இந்த சமூகத்தால் இளம்குறுத்துகளிடம் புரையோடிப் போயிருக்கும் எதிர்மறை எண்ணங்களை தகர்க்க வல்லதாக உள்ளதை அறிய முடிகிறது. கதைகளில் பெறப்படும் நல்ல கருத்துக்களை உள்வாங்குவது அவர்களின் வருத்தங்கள் காணாமல் போய் வாழ்வின் மீது பெரும் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

குறிப்பாக விழியன் கதைகளில் காணும் இறுதிமுடிவுகள் சிறார்களின் மனதில் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதால் அது அற்புத சத்து மருந்தாக வேலை புரிகிறது.

இனிதாக முடிந்த பயணத்தை நினைவுகூறும் வகையாக முடிகிறது திரு குரு ஏர்லைன்ஸ் கதை. ‘ஆசிரியரே, நாம் ஏன் அண்டார்டிகா போகக்கூடாது’ என்று கேட்டது மான். ஹோ… என கூச்சல் ஆப்பிரிக்காவை சுற்றிப் பார்க்க எல்லோரும் இறங்கினர். பயணம் இனிதே முடிந்தது” (Vizhiyan, 2014).

மாகடிகாரம் கதையில் பீமனை மனதார பாராட்டும் ஒரு நேர்மறை எண்ணத்துடன் கதை நிறைவடைகிறது (Vizhiyan, 2021). அந்த வாக்கியங்களாவன…

“எல்லோரையும் ஒருசேர பார்த்ததில் முதலில் அதிர்ச்சியுற்ற ஹெர்குலஸ் பின்னர் பொறுமையாக எல்லாக் கதையையும் கேட்டறிந்தார். தீமனை மனதாரப் பாராட்டினார். வீரர்களை அவரவர் ஊர் திரும்பும்படியும் மாகடிகாரத்தின் கதையினை யாருக்கும் சொல்ல வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.’

‘நீங்களும் யாருக்கும் சொல்லிடாதீங்க”.

பயணம்போ பயணம்போ என்னும் கதையில், பயணிப்பதால் ஏற்படும் சிறப்பான அனுபவங்களை கண்முன் காட்டி நிறைவு செய்கிறார் ஆசிரியர். ‘இந்த மாற்றம் எல்லாம் பயணத்தால் தான் கிடைத்தது. எத்தனை அன்பானார்களை சந்தித்தேன் தெரியுமா? எத்தனை விதமான அனுபவம்… இதுவே என்னை மாற்றியது. நான் இப்போது கடுமையாக வேலை செய்வது அடுத்த பயணத்திற்கு தான். என் சொந்தக் காசில் சில இடங்களை பார்க்க வேண்டும், அடுத்த பயணத்தில் என்னுடன் வருகின்றாயா?” (Vizhiyan, 2020).

வித்ரனும் தீவும் எனும் கதையில் ஒரு தீவின் நன்மை கருதி அதைப்பற்றிய உண்மையை தெரிவிக்காது இருக்கும் பண்பை மறைமுகமாக நமக்கும் சுட்டிக்காட்டி நிறைவு செய்கிறார் ஆசிரியர். ‘ஒரு விடியற்காலையில் தீவே கூடி நின்று வித்ரனை வழியனுப்பி வைத்தது. எல்லோரும் கையசைக்க வித்ரன் துடுப்பினைப் போட்டு அந்த வாகனத்தினைச் செலுத்தினான். ஆனால் யாரிடமும் எங்கே இருந்தான், எப்படித் திரும்பி வந்தான் என்ற கதையினைச் சொல்லவே இல்லை. அந்தத் தீவை நோக்கிப் படையெடுத்து அந்தத் தீவையே, நாசமாக்கி விடக்கூடாது அல்லவா (Vizhiyan, 2016).’

கிச்சா பச்சா எனும் கதையில் தன் நண்பர்களுடன் ஆசையாக தன் அனுபவங்களை பகிர்தல் எனும்படி கதையை முடித்துள்ளார்.’வீட்டு மரத்தில் இருந்த ஒவ்வொருவரிடமும் அவர்கள் சென்று வந்த கதையையும், கேட்ட கதைகளையும் சொல்லிக் கொண்டே இருந்தார்கள் கிச்சாவும் பச்சாவும்.’ இப்படி முடித்திருப்பது அவரவர் தன் நண்பர்களுடன் உரையாடும் தருணத்தை நமக்கு நினைவு கூறும்படியாக அமைந்துள்ளது (Vizhiyan, 2017).

கடல் எனும் தலைப்பிட்ட கதையில் தோழமையை நேசிக்கும் விதமாக கதை நிறைவுறுகிறது (Vizhiyan, 2013). ‘வலசைப் பறவைகளை கடலுக்கு நடுவே சந்தித்தோம். ஒரு உடைந்த மரத்தின் மீது அவைகள் நின்றன. அவைகள் சொல்லியே நிலத்திற்கு வந்தோம்’

‘ஆமாம் அதனுடைய பெயரை கேட்டீர்களா?’

“வி. கு. ஃபேல்கன்”. (Vizhiyan, 2015)

ஒரே ஒரு ஊரிலே எனும் தலைப்பிட்ட கதையில் நட்பு தொடர்ந்து வரும் அழகை குறிப்பிட்டு முடிக்கிறார் ஆசிரியர். ’நட்பு தொடர்ந்து கொண்டே இருந்தது. வளர்ந்து கொண்டே இருந்தது. நட்புடன் அவர்களும் வளர்ந்து கொண்டே இருந்தார்கள் (Vizhiyan, 2018).’

சைக்கிளில் வந்த வினோதன் எனும் தலைப்பிட்ட கதையில் மிதிவண்டியை ஓட்டக் கற்றுக் கொண்டதால் ஏற்படும் மகிழ்ச்சியை பதிவு செய்தபடி நிறைவு செய்கிறார் ஆசிரியர். 'சைக்கிளின் இடது பெடலை அழுத்தி காலைத் தூக்கிப் போட்டு சீட்டில் அமர்ந்தான். ஜம்மென்று சைக்கிளை மிதித்து ஓட்டினான். "வாவ் வாவ்... அருமை" என்று நண்பர்கள் பின்னால் இருந்து கத்தினார்கள் (Vizhiyan, 2018).'

கன்ஸ் மாமா எனும் தலைப்பிட்ட கதையில் கதிகலங்கி போய் நிற்கும் ஒரு சிறுவனிடம் உனக்கு எல்லாம் சரியாகவே நடந்திருக்கிறது எனும் படியாக ஒரு நேர்மறை வாக்கியத்துடன் கதை முடிவு பெறுகிறது. 'நேத்து நைட்டு தீபுடிக்கிற கொஞ்ச நேரத்து முன்னாடி கணேசன் வந்தாரு, நீ ஸ்கூல் டிரஸ் கேட்டிருந்தியாமே... உன் சைசுக்கு வாங்கி கொடுத்துட்டு போனாரு. இந்தா இந்த கவர்ல இருக்கு பாரு" எனக் கவரை நீட்டினார் (Vizhiyan, 2018).

புசிட்போலோ எனும் தலைப்பிட்ட கதையில் பரிசு பெற்ற திட்டத்தை பாராட்டும் அதே நேரத்தில் நெகிழிகள் குறித்த சமூக அக்கறையும் வெளிப்படுகிறது.' சீரனின் திட்டம் முதல் பரிசு பெற்றது எனச் சொல்லத் தேவையில்லை. பரிசு கொடுத்ததும் அந்த பேராசிரியர் கண்களைத் துடைத்துக் கொண்டு,' நெகிழிகளை கொஞ்சம் கவனமாக சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் பயன்படுத்தி இருந்தால் நாம் இந்த நிலைக்கு வந்திருக்கமாட்டோம். திரும்ப நம் பூமிக்கு செல்வோம் சீரன்' (Vizhiyan, 2018).

போரூர் சிக்னல் எனும் தலைப்பிட்ட கதையில் கதையின் தலைப்புக்கு ஏற்றார் போல எல்லாம் சரியாகவே நடக்கும் என்பதாக கதை முடிவு பெறுகிறது.

'கடையை விட்டு வெளியே வந்ததும் சிக்னலைப் பார்த்தான் மணி.'

'பச்சை!'

'போலாம் ரைட்!'

நிலா நூலகம்+ திரு= திருவாளர் எனும் தலைப்பிட்ட கதையில் புத்தகங்களை மீட்பது குறித்த நல்ல செய்தியுடன் கதை நிறைவு பெறுகிறது (Vizhiyan, 2018). 'தாங்கள் வந்த வேலை முடிந்தது. எல்லா புத்தகங்களையும் மீட்டெடுத்தனர். ஆனால் எங்கிருந்து மீட்டனர் என்று சொல்லவே இல்லை. இவர்கள் பூமிக்கு திரும்ப ராக்கெட்டில் ஏறும்போது அந்த ரோபோ இவர்களைப் பார்த்து தலைவணங்கி நன்றி என்று சொன்னது (Vizhiyan, 2018).

கிளியோபாட்ரா எனும் தலைப்பிட்ட கதையில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் ரம்மியமான சூழலுடன் கதை நிறைவுபெறுகிறது. 'கிளிகளின் மகிழ்வான இசை அந்த மாலையை அழகாக்கியது' (Vizhiyan, 2018).

அனிதாவின் கூட்டாஞ்சோறு எனும் தலைப்பிட்ட கதையில்அனிதாவின் தன்னம்பிக்கையை பிரதிபலிக்கும் வார்த்தைகளுடன் நிறைவு செய்கிறார் ஆசிரியர். 'ஆமாம் ரஹீம். நான் டாக்டராக போறேன்' என்றாள் அனிதா உறுதியாக (Vizhiyan, 2018).

அறிவரசன் விடுதி நாட்கள் எனும் தலைப்பிட்ட கதையில் புகார் தெரிவிக்க புலம்பலை வெளிப்படுத்தாத நல்ல பழக்கத்தை அடிக்கோடிட்டு கதையை நிறைவு செய்கிறார் ஆசிரியர். 'புலம்பலையோ புகார் தெரிவிப்பதையோ அதன் பின்னர் நான் மேற்கொள்ளவே இல்லை' (Vizhiyan, 2018).

எங்கள் கின்னஸ் சாதனை எனும் தலைப்பிட்ட கதையில் தான் செய்த சாதனையை தன்னம்பிக்கையுடன் பகிர்வதாக கதையை நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

'நான் என்னுடைய மிகச்சிறந்த நடனமாக அதனையே குறிப்பிடுவேன். கின்னஸ் சாதனையை விட மிகப்பெரிய சாதனை புரிந்தது போல் இருந்தது (Vizhiyan, 2018).

தோழர் மூக்கன் எனும் தலைப்பிட்ட கதையில் உதவி செய்ததால் கிடைத்த நன்மையையும் அதனால் ஏற்பட்ட மன நிறைவையும் கதையின் முடிவு எடுத்துச் சொல்கிறது. 'இரண்டு நாள் கழித்து காப்பாற்றப்பட்ட பெரியவர் வீட்டுக்கு வந்து நிறைய பழங்களையும் புத்தகங்களையும் கொடுத்தார். உனக்கு என்ன வேண்டும் கேள்' என்றார். 'ஒரு தூண்டில்' என்றான் (Vizhiyan, 2018).

பார்ட்டிக்கு வந்த அன்பு கடிதம் எனும் தலைப்பிட்ட கதையில் சிறியவர்கள் பெரியவர்களை சமாதானம் செய்யும் மேம்போக்கான உத்தியை சொல்லி அழகாக கதையை நிறைவு செய்கிறார் ஆசிரியர். 'பாட்டியை குழந்தைகள் சமாதானம் செய்தனர். அந்த காட்சியை பார்த்த படியே மிகுந்த மனநிறைவுடன் மணி பள்ளியை விட்டு வெளியேறினார் (Vizhiyan, 2018).'

கோலப்பன் கண்ட இரவு காட்சி எனும் தலைப்பிட்ட கதையில் மகிழ்ச்சியை சிலைகளும் வெளிப்படுத்தின என்பதாக ஆசிரியர் நிறைவு செய்திருப்பார். 'பூங்காவில் இருந்த எல்லா சிலைகளும் உடனே கை தட்டின. குழந்தை சிலை மகிழ்வாக அமர்ந்தது. கோலப்பனும் சிரித்துக்கொண்டே 3டி தியேட்டரை நோக்கி ஓடினான் (Vizhiyan, 2018).'

அர்ச்சனா சந்தித்த சிரோப்டெராக்கள் எனும் தலைப்பிட்ட கதையில் வௌவாலின் அறிவியல் பெயரைச்சொல்லி அனைவரும் சிரித்துக் கொள்வதாக ஒரு மகிழ்ச்சியான சூழலில் கதையை நிறைவு செய்திருக்கிறார் ஆசிரியர். 'சிரோப்டெராவா?' என்றார். அதிசயமாக பார்த்தார். அத்தை டர்கி அர்ச்சனாவிடம் சொல்லி இருந்தான். வௌவால்களின் அறிவியல் பெயர் தான் அது. மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள் (Vizhiyan, 2018).'

சூரியன் எடுத்த விடுமுறை எனும் தலைப்பிட்ட கதையில் ஒரு மகிழ்ச்சியான குழந்தை என ஒரு குழந்தை தன்னை பிரகடனப்படுத்திக் கொள்வதாக கதை முடிவு பெறுகிறது. இது ஒரு நல்ல சிந்தனையாக உற்று நோக்கப்படுகிறது.

'இப்படிக்கு

மகிழ்ச்சியான குழந்தை

பெறுநர்

சூரியன்,

சூரிய குடும்பம்,

பால்வெளி அண்டம்'

அன்பு எனப்படுவது யாதெனில் எனும் தலைப்பிட்ட கதையில் பழத்தின் சுவையை அத்தனை இனிப்புடன் வெளிப்படுத்தி நிறைவு செய்திருப்பார் ஆசிரியர். 'அர்ச்சனா கைநீட்டியதும் அவள் கையில் பழத்தை போட்டு விட்டு பறந்து சென்றது. அந்த பழம் அத்தனை சுவை நிறைந்ததாக, தன் வாழ்வில் சுவைத்திராத இனிப்புடன் இருந்தது' (Vizhiyan, 2018).

நிசப்தம் எனும் தலைப்பிட்ட கதையில் ஒரு ஆசிரியர் மாணவர்களை பார்த்து பாராட்டி பூரித்துப் போகும் தருணத்தை கண்முன் கொண்டுவந்து கதையை நிறைவு செய்கிறார் ஆசிரியர். எப்போதும் விரைப்பாக இருக்கும் கணக்கு ஆசிரியர் "சத்தமே இல்லாமல் சாதிச்சுட்டீங்கடா பசங்களா...!' என மணியின் முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார் (Vizhiyan, 2018).

முதல் நாள் முதல் காட்சி எனும் தலைப்பிட்ட கதையில் பள்ளி சீருடை எடுக்க பணம் கிடைத்த மகிழ்ச்சியைக் கொண்டாடியபடி கதை முடிவு பெறுகிறது. ரசிகர் பட்டாளம் கூச்சலிட்டும் விசில் அடித்தும் தியேட்டரை விட்டு வெளியேறிக் கொண்டு இருந்தது. அவர்களைவிட படுகுஷியில் பாஸ்கர் தன் பாக்கெட்டில் இருந்த 800 ரூபாயை பத்திரப்படுத்தி வீட்டை நோக்கி உற்சாகமாக விரைந்தான் (Vizhiyan, 2018).

மதனின் வெயில் நாட்கள் எனும் தலைப்பிட்ட கதையில் குழந்தைகளிடம் பெற்ற முத்தத்தை எண்ணி சிலாகிக்கும் அழகிய தருணங்களை கொண்டு கதை முடிவு பெறுகிறது. 'மறுநாள் விரைவாக எழுந்து மாமாவுடன் கிளம்பினான். அன்றைய தினம் பொம்மை கேட்டு அழுத எல்லா குழந்தைகளுக்கும் மதன் முந்தைய ஸ்டிராக்கள் கொண்டு செய்த புதிய புதிய வடிவிலான உருவங்களுக்கு பரிசாக பல முத்தங்களை மதன் பெற்றான். ஒவ்வொரு முறையும் ஜில்லென நனைந்தான் (Vizhiyan, 2019).

டம்ராவின் இசை கச்சேரி எனும் தலைப்பிட்ட கதையில் ஒரு எறும்பை பற்றி சுவாரசியமாக பதிவு செய்து இனி எறும்புகளை ஆழ்ந்து உற்று நோக்கக் கூடிய தன்மையையும் ஆசிரியர் நம் முன் வைத்தபடி கதை முடிவு பெறுகிறது. 'எங்கேனும் பார்த்தால் அதன் கையில் இசைக்கருவி இருக்கின்றதா என பாருங்கள். அது டம்ராவாகக் கூட இருக்கலாம்' (Vizhiyan, 2019).

ரகசியம், உஷ்ஷ் எனும் தலைப்பிட்ட கதையில்குழந்தைகளின் விளையாட்டுத் தனத்தை விலங்குகளும் பின்பற்றுவதாக ஒரு அழகியலுடன் கதையை நிறைவு செய்திருப்பார் ஆசிரியர். "அட," என்று சொல்லிவிட்டு நன்றியையும் தெரிவித்தது ஒட்டகச்சிவிங்கி.

ஆமாம், நீங்கள் இப்ப யாரிடம் அந்த ரகசியத்தை கேட்டு தெரிந்து கொள்வீர்கள்? அச்சோ… குருவியும் ஏற்கனவே ஒருத்தர் கிட்ட சொல்லிடுச்சே (Vizhiyan, 2019).

அந்த பச்சை நிலவில் எனும் தலைப்பிட்ட கதையில் பாட்டி வடை சுட்டு பிள்ளைகளுக்கு உண்ண கொடுப்பது போல் நிறைவு செய்திருக்கிறார் ஆசிரியர். "ஒரு காகம் நான் ஏமாந்த சமயம் வடையை திருடிக்கொண்டு போய் விட்டது. நான் கேட்டிருந்தால் கொடுத்திருப்பேன்" என்றார் பாட்டி. அட, இன்னும் இந்த காகம் வடை சுட்ட கதை நடந்து கொண்டுதான் இருக்கா என வியந்தாள் ரிகிலா. அதற்குள் அவளைத் தேடி அவள் வகுப்பு நண்பர்கள் வந்து விட்டார்கள். எல்லோருக்கும் பாட்டி வடை சுட்டு கொடுத்தார்கள் (Vizhiyan, 2019).

ரோபூ எனும் தலைப்பிட்ட கதையில் பூதத்தை தன்னுடன் இருக்கும்படி வேண்டும் சிறுவன் அடையும் ஆச்சரியத்தை தொக்கி நின்ற படி கதையை நிறைவு செய்திருப்பார் ஆசிரியர். "ரோபூ, நீ என்னை அடிக்கடி வழிநடத்தனும். என் கூடவே வாழ்க்கை முழுக்க இருக்கணும்" என்று கூறினான். அடுத்த வினாடி (Vizhiyan, 2019).

விதை என்னும் கதையில் குப்பை குறித்தும் நெகிழி பயன்பாடு குறித்தும் சமூக அக்கறை சார்ந்து சிறார்கள் சிந்திக்கும் விதமாக கதையை நிறைவு செய்திருப்பார் ஆசிரியர். மதினி…" குழப்பமா இருக்கு. ஏன் இவ்வளவு குப்பை? நாம குப்பையை குறைக்க முடியுமா? பெருசா விட்டு இந்தக் குப்பையை எப்படி திரும்ப பயன்படுத்தலாம் என்று கண்டுபிடிக்கணும். இப்போதைக்கு குறைந்த பிளாஸ்டிக்கை மட்டும் பயன்படுத்துவேன் (Vizhiyan, 2019)."

லகலகாவின் ஒரு நாள் கூத்து எனும் தலைப்பிட்ட கதையில் கசாயம் குடித்ததால் உடல்நலம் பெற்றதை குழந்தைகளுக்குச் சொல்லும் ஒரு செய்தியாக இந்தக் கதையை நிறைவு செய்திருக்கிறார் ஆசிரியர்.

"வீட்டில் மருத்துவர் இருந்தார். வா வா, உனக்கு மருந்து கண்டுபிடித்து விட்டேன். இதை குடி" என மருந்தினை கொடுத்தார். சமர்த்தாக லகலகா மருந்தினை குடித்தது. அது சில வேர் மற்றும் செடிகளை கொண்டு செய்த கசாயம். கசப்பாக இருந்தது. ஆனால் சில நிமிடத்திலேயே லகலகா இயல்பு நிலைக்கு திரும்பியது. நன்றி மாமா" மருத்துவரைப் பார்த்து நன்றியைத் தெரிவித்தது. இப்படியாக ஒரு நாள் முடிந்தது. கதையும் முடிந்தது.

இப்படியாக விழியனின் கதைகளில் 99% நேர்மறை முடிவுகளே இடம்பெறுகிறது. இதனை வாசிக்கும் சிறார்களின் வாழ்வு நிச்சயம் ஒரு மேம்பட்ட நிலையை அடையும் என்பது வெள்ளிடைமலை.

## ஒழுக்க நெறியில் நீடிக்கும் பண்பு

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்"

என்பது வள்ளுவ பெருமகனாரின் குறள். ஒழுக்கம் என்பது உயிரை விட அத்தனை மேலானது என பொருளில் அடர்த்திக் கூட்டி இருப்பார். இக்குறள் வழி விழியனும் தன் படைப்புகளில் ஒழுக்க நெறி கடைபிடித்தலை முக்கிய பண்பாக வெளிப்படுத்தி இருப்பார் (Parimelalhagar, 1986).

விழியன் கதைகளில் காணப்படும் கதாபாத்திரங்களில் 75 சதவீதம் ஒழுக்க நெறியை கடைப்பிடிக்கும் பண்பாளர்களாக காணக் கிடைக்கிறார்கள். மீதமிருக்கும் 25 சதவீதத்தினரும் கதையின் இறுதியில் மனம் மாறுபவர்களாக இருக்கிறார்கள். அல்லது ஒழுக்க நெறியை கடைப்பிடிக்காததால் வருத்தம் அடைபவர்களாக இருக்கிறார்கள். பிறருக்கு நன்மை செய்தல், ஆபத்து நேரத்தில் உதவுதல், இம்மியளவும் பிறருக்கு தீங்கு நினைக்காத இருத்தல், பொய் பேசாது வாய்மையுடன் வாழ முன்னெடுத்தல் என அனைத்துவித சூழல்களிலும் ஒழுக்கத்தை கடைபிடிப்பவர்களாக இருக்கிறார்கள். இப்பண்பு நிலைகளை சிறார்களின் மனதில் உரமாக உள்ளே தூவுகிறார் விழியன் தன் கதைகள் வாயிலாக.

## கதைகளில் வரும் மாந்தர்களின் குணநலன்கள்

கதைகளின் வழியாக அதை வாசிக்கும் சிறுவர்களின் மனதில் அக்கதையில் ஆசிரியர்கள் என்றென்றும் வாழ்கிறார்கள். எழுதப்பட்ட கதை மரமாகும் பட்சத்தில் சில எழுத்தாளர்கள் அம்மரத்தின் வேர்களாக விளங்குகிறார்கள். அப்படியாயின் மரத்தின் கிளைகள், காய்கள், அனைத்தும் கதாபாத்திரங்களாக விளங்குகின்றன.

விழியன் கதைகளில் வரும் மாந்தர்களின் குணநலன்கள் கவரப்பட்டு அதை வாசிக்கும் சிறார்களும் அப்படி ஒரு குணநலனை பெற வேண்டுமென விழைகிறார்கள். அல்லது இப்படிப்பட்ட சிறப்பான குணநலன்களை பெற்ற கதாபாத்திரங்களை கதைகளில் சித்தரிக்கும் போது சிறார்கள் எழுச்சியடைந்து, ஈர்ப்பு பெற்று அதைப் போன்ற உதாரணங்களை துணை கொண்டு வாழ முற்படுகிறார்கள்.

மலைப்பூ நாவலில் வரும் லட்சுமியை போல, அர்ச்சனா சந்தித்த சிரோப்ர்டெராக்கள் கதையில் வரும் அர்ச்சனாவை போல, போரூர் சிக்னல் கதையில் வரும் ராகுவைப் போல, மதனின் வெயில் நாட்கள் கதையில் வரும் மதனை போல, முதல் நாள் முதல் காட்சி கதையில் வரும் பாஸ்கரை போல, நிசப்தம் கதையில் வரும் தலைமையாசிரியர் போல, பாட்டிக்கு வந்த அன்புக் கடிதம் கதையில் வரும் முன்னாள் மாணவனைப் போல, தோழர் மூக்கன் கதையில் வரும் சலீமை போல ஒரு சிறப்பியல்பு பெற்றவராக இருக்க வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கும்.

பெரிதும் அறிவுரை கூறுதல் நோக்கமாகக் கொண்ட கதைகள் மலிந்திருக்கும் தமிழ்ச்சூழலில் முடிந்த மட்டிலும் அது கடந்து குழந்தை உலக உணர்வுகளை தூண்டக்கூடிய குணநலன்கள் பெற்ற கதைகள் மேற்கூறியவை.

இப்படி சிறப்பான இயல்புகளை பெற்ற கதாபாத்திரங்களை வாசிக்கும் சிறார்களின் மனது தாமும் அப்படியொரு இயல்பு கொண்டவராக உருமாற வேண்டும் என்று உறுதி கூடும்.

## செயல்களில் உத்வேகம்

விழியன் கதைகளில் காணப்படும் இயல்புத்தன்மை ஒவ்வொரு சிறுவர்களின் வாழ்வியலோடு ஒத்துப் போவதால் அவரவருக்கான நம்பிக்கை அதிகரிக்கிறது. இதனால் சிறார்களின் செயல்பாடுகளில் உத்வேகம் ஏற்படுகிறது. வெற்றி தோல்வி பாதிக்காத வண்ணம் அடுத்த முயற்சிக்கு தயாராகும் உத்வேகத்தை கதை வாசிப்பு ஏற்படுத்தித் தரும். அத்துடன் மனதைப் பண்படுத்தி செயல்களில் உத்வேகத்தை கூட்டும்.

வளரும் குழந்தை தன் சிறார் பருவத்திலே தான் தன் எதிர்கால வாழ்க்கைக்குத் தன்னை தயார் செய்து கொள்கிறது. இப்பருவத்தில் 'அறநிலை பருவம்' என்றும் கூறலாம் என்று உளவியல் அறிஞர் வில்லியம் இ. பிளாட்ஸ் கூறுகிறார்.

விழினுடைய படைப்புகள் உயர்ந்த சமூக மதிப்பீடுகளை சிறார்களிடம் கடத்துவதாக இருக்கிறது. ஒருபுறம் வேடிக்கையாக உலகை தெரிந்து கொள்வதற்கான பலகணியாக இவரது கதைகள் இருப்பதுடன் மற்றொருபுறம் அன்றைக்கான புரிதலின்படி சமூகத்துக்கே சிறார்களை தயார்படுத்தும்

வகையிலும் இவரது கதைகள் திகழ்கிறது. அதனால் அதை வாசிக்கும் ஒவ்வொரு சிறுவரின் மனநிலையிலும் செயல்நிலையிலும் உத்வேகம் கொப்பளிக்கிறது.

## அர்த்தம் பொதிந்த வாழ்வு

'எனக்கு விடுதலை தந்தவை பத்திரிகைகளும் பாடப்புத்தகம் அல்லாது புத்தகங்களும் தான். பத்திரிகையில் எங்கள் பள்ளிக்கூடத்து வாசலில் விற்ற டிங் டாங் முக்கிய பத்திரிகை. காலனாவோ அரையணாவோ இதன் விலை. அப்பா கொடுக்கிற காசில் வாங்கி படிப்பேன். என் கற்பனைகள் விரிந்தன. நான் கனவு காண தொடங்கியது டிங் டாங் படித்தபின் தான். 1952-54 ஆண்டுகளில் எனக்கான அஸ்திவாரம் டிங் டாங் தான். அவ்வளவு அழகான காலம்' அது என்று எழுத்தாளர் பிரபஞ்சன் தன் சிறுவயது வாசிப்பைப் பற்றி சிலாகித்துக் கூறுகிறார்' (Nagarajan, 2001).

பிறந்தோம், வளர்ந்தோம், என்றோ ஒரு நாள் இறப்போம் என்று வாழ்வதைவிட தீர்க்கமான குறிக்கோளுடன் இப்படித்தான் வாழவேண்டும் என வாழும்போது ஒரு மகோன்னத மனநிறைவு கிடைக்கும்.

அந்த நிறைவு அர்த்தம் பொதிந்த வாழ்வாக மிளிரும். தான் வாசிக்கும் கதைகளை தன்னுடன் இணைத்துக் கொள்ளும் சிறுவர்கள் தன் வாழ்க்கைப் பயணத்தில் கதைகளின் யதார்த்தத்துடன் தம் நிலையையும் பொருத்திப் பார்த்துக் கொள்கிறார்கள். அந்தப் புள்ளியில் அவர்கள் இணைந்து கொள்கிறார்கள்.

குமாரின் சுற்றுலா சிறுகதையில் சென்னைக்கு பள்ளி நண்பர்களுடன் செல்லும் இன்ப சுற்றுலாவுக்கு சிறுக சிறுக சேமித்து வைத்த பணத்துடன் சுற்றுலாவுக்கு தயாராகிறான் குமார். சுற்றுலா செல்லும் தினத்தில் உடல் நலம் குன்றிய ஒரு பாட்டிக்கு உதவிகள் செய்யப் போய் தன்னிடமிருந்த பணம் செலவாகிப் போய்விட சுற்றுலா ஆசை நிறைவேறாமல் ஆகிவிட்டது. ஆனால் குமாரின் நற்செயலை பார்வையிட்ட பள்ளி முதல்வர் அவனை சுற்றுலாவுக்கு அழைத்து செல்ல அவன் வீட்டுக்கே பேருந்துடன் வந்து நிற்பதாக கதை முடிகிறது.

வாசிக்கும் போது ஒவ்வொருவருக்கும் இக்கதையில் குமாரின் குணநலனுடன் தன்னை இணைத்துப்பார்க்கும் போக்கு கைவரும். தன்னிடம் இதற்கு மாறான தன்மை கொண்ட எண்ணங்கள் இருப்பின் அதை களைய வேண்டும் என்ற உத்வேகமும் பிறக்கும். இப்படிப்பட்ட சிறந்த எண்ணங்களை கொண்டவராக இருந்தால் தான் நாமும் பிறருக்கு நல்உதாரணமாக இருக்க முடியும் என்று எண்ணி தன்னை சரி செய்து செதுக்கி கொள்வார்கள்.

இவ்வாறாக, விழியன் கதைகள் சிறார்களுக்கு பேருதவி புரிகிறது என்பது தெளிவாகிறது. பொதுவாகவே சிறார் இலக்கியம் குறித்த பார்வை இன்றைக்கு மேம்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த வளர்ச்சியில் கண் கொண்டு அது பார்க்கப்படுகிறது.

## கதை தரவுகள் ஏற்படுத்தும் ஆளுமை மாற்றங்கள்

ஆளுமை என்னும் சொல் (personality) என்னும் ஆங்கிலச் சொல்லை குறிப்பதாக அமைகிறது. ஒருவரது சிறப்பான பண்புகளைக் குறிக்கும் வெளித் தோற்றம் என்பதாக சுட்டிக்காட்டலாம்.

நம் சமூகத்தில் எவரொருவர் குறிப்பிட்ட ஒரு ஆளுமை பண்பிலோ, திறனிலோ அளவில் மிகுந்து விளங்குபவனை தனித்தன்மையான ஆளுமை உடையவனாக அடையாளப்படுத்தலாம்.

ஆளுமையானது ஒருவரது பண்புகளின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு என்கிறார்

ஆளுமை பண்பின் ஓர் உயர்நிலை தலைமை பண்பு ஆகும். 'தலைமை' என்னும் சொல் ஆளுமையின் ஒரு குணநலனாகவும் சூழலின் விளைவாக ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

அந்த வகையில் தலைமை பண்பை பெறுபவர்களும் அடைபவர்களும் வாசிப்பு பழக்கத்தை கை கொண்டவர்களாக இருப்பதை நாம் நம்மிடையே உலவும் தலைவர்களைப் பார்த்து அறிய முடிகிறது.

விழியன் கதைகளில் வரும் தலைவன், தலைவி கதாபாத்திரங்கள் அனைத்துமே தலைமை பண்பாளர்களாக மிளிரும் வகையில் சிறந்த ஆளுமை பெற்றவர்களாக கதை முழுதும் வலம் வருகிறார்கள்.

## குவி சிந்தனையிலிருந்து விரி சிந்தனைக்கு

பழைய அனுபவங்களை சிந்தித்து அவற்றுடன் புதிய அனுபவத்தை பொருத்திப் பார்த்து ஒரு முடிவுக்கு வருவது குவி சிந்தனை என்று சொல்லப்படுகிறது. பழைய அனுபவத்துடன் புதிய அனுபவத்தை பொருத்திப் பார்த்து மேலும் ஒரு புதிய அனுபவத்தை பெற முயற்சிப்பதை விரி சிந்தனை என்று சொல்லக் காண்கிறோம்.

ஒரு மனிதனின் ஆய்வுத்திறன் என்பது அவன் பெற்றுள்ள அனுபவத்தையும் சிந்திக்கும் திறனையும் பொறுத்தே அமைகிறது. இப்படியாக சிறார்களுக்கு இளமையிலேயே சிந்திக்கும் திறனை பெற வாய்ப்புகள் அளித்தும் பயிற்சியளித்தும் ஊக்குவிக்க வேண்டும்.

இதற்கான வாய்ப்புகளும் பயிற்சிகளும் வாசிப்பு பழக்கம் மூலம் அதிகம் ஏற்படுவதாக ஆய்வு அறிஞர்கள் சொல்கிறார்கள். சிந்தித்தல் எனும் பண்பு சிந்தை அல்லது மூளையில் முதன்மையாக இடம் பெறும் ஓர் அடிப்படையான செயல்பாடு. ஆங்கிலத்தில் இந்த சிந்தித்தல் என்னும் வார்த்தையை ஓர் அறிதிறன் வழிமுறை (Cognitive Process) என்று கூறுவர்.

சிந்தித்தலே எண்ணங்களுக்கு வழிகோலுகிறது. இந்த எண்னங்களே மொழி, கணிதம், ஓவியம், இசை, கலை, மனித செயல்பாடுகள் எனப் பல வடிவங்களில் வெளிப்படுகின்றன.

எல்லா காகங்களையும் போல் அல்லாது ஏன் கருப்பானோம் என்று சிந்தித்ததால் தான் கிச்சா பச்சா என்னும் கதை சிறப்புப்பெற்றது. இதை வாசிக்கும் சிறார்களின் நெஞ்சில் நிறம் குறித்த எண்ணமும் சிந்தனையும் மேலோங்கும். இக்கதை ஞானிக்காக்கா, டைனோசர் என வெவ்வேறு தளங்களில் பயணிக்கிறது. இதன் மூலம் குவி சிந்தனையிலிருந்து விரி சிந்தனைக்கு மூளை பயணிக்கத் தொடங்குகிறது.

## முடிவுரை

விழியன் படைப்புகளின் மூலம் ஒரு மேம்பட்ட வாழ்வு நிலை, ஒழுக்க நெறியில் நீடிக்கும் பண்பு, செய்யும் செயல்களில் உத்வேகம், அர்த்தம் பொதிந்த வாழ்வு வாழ்வது, கதை தரவுகள் வழி ஆளுமை திறன் பெற்றவர்களாக இன்றைய சிறார்கள் விளங்குவது, குவி சிந்தனையிலிருந்து விரி சிந்தனையாளர்களாக உருமாற்றம் பெறுவது ஆகியன பற்றி இக்கட்டுரையில் அறியலாம். இதன் மூலம் விழியன் கதைகளை வாசிக்கும் சிறார்களின் வாழ்வியல் மாற்றங்கள் பயனுள்ளதாக இருப்பதாக நோக்கப்படுகிறது.

## References

Hindu, (2022) Tamil thisai, Daily newspaper, Chennai, India.

Nagarajan, K. (2001) Kalvi Ulaviyal, Ram Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (1986) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Pathy, R.V. (2005) Tahrkala Seerar Kadhaigal, Niveathika Pathippagam, Chennai, India.

Vizhiyan, (2013) kadalllllll, Vanam Pathippagam, Chennai, India.

Vizhiyan, (2014) Thiru Guru Airlines, Bharathiputhagalayam, Chennai, India.

Vizhiyan, (2015) Ore Oru Oorile, Vanam Pathippagam, Chennai, India.

Vizhiyan, (2016) Meyamboo, Bharathi puthagalayam, Chennai, India.

Vizhiyan, (2017) Kicha Pacha, Vanam Pathippagam, Chennai, India.

Vizhiyan, (2018) Anithavin Kootanchooru, Uma Pathippagam, Chennai, India.

Vizhiyan, (2019) Robo, Vanam Pathippagam, Chennai, India.

Vizhiyan, (2020) Jupitarku Sentra Indiran, Bharathiputhagalayam, Chennai, India. Buy

Vizhiyan, (2021) Maakadikaram, Bharathiputhagalayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License